


# நகர் ஊரமைப்பு துறை (DTCP) ஈரோடு மாவட்டம்
# சிக்கரசம்பாளையம் ஊராட்சி

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், சிக்கரசம்பாளையம் ஊராட்சி, மற்றும் கிராமம் புல எண்: 526/3B -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.(திட்டமில்லாதபகுதி)

அளவு: 1 :33'0" (அ) 1:400
இணையவழி விண்ணப்ப எண்:- KEWP8LRQ

**குறிப்பு:-**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | : | 0.99 ஏக்கர் (அ) 4008.00 ச.மீ |
| கோரிய மனைகள் | : | 16 |
| ஒதுக்கிய மனைகள் | : | 15 |
| மனைப்பிரிவு எல்லை | | |
| நிலையில் உள்ள சாலை | | |

வ

ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு :-(மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)x10%
:- (4008.0 - 1552.93)x10% = 245.51 ச.மீ
பொது உபயோகம் பரப்பு :-(4008.0 - 1552.93)x0.5% = 12.28 ச.மீ

**பொது ஒதுக்கீடு:-**

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-(தான ஆவண எண்:-6188/2022 நாள்:-22-08-22)

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் சாலை | :- | 1552.93 ச.மீ |
| பூங்கா ஒதுக்கீடு பரப்பு | :- | 245.51 ச.மீ (10.00%) |

(மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீட்டின் படி உரிய கணக்கு தலைப்பில் 10% பொது ஒதுக்கிட்டிற்கான தொகை செலுத்தப்பட்டுள்ளது)

| | | |
|---|---|---|
| பொது உபயோகம்(A) | :- | 30.50 ச.மீ (1.24 %) |

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்காக உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-(தான ஆவண எண்:-6189/2022 நாள்:-22-08-22)

| | | |
|---|---|---|
| பொது உபயோகம்(B) | :- | 30.50 ச.மீ (1.24 %) |

**கட்டிட வரம்பு :-**

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ விடப்படல் வேண்டும்,
9.0மீ க்கும் மேல் - 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்,

**மூலை முடக்கு:-**

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50x1.5மீ விடப்படல் வேண்டும்,

**நிபந்தனைகள்:-**

1. அரசாணை எண்:181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்-09.12.2020-ல் தெரிவுத்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கபடல் வேண்டும்.
2. இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்படவில்லை என்றும், சிக்கரசம்பாளையம் ஊராட்சி தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்கு உண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனை பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் /விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு (BDO/UE) செயல் அலுவலர் / யூனியன் பொறியாளர்/ நகராட்சி பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
7. மனைப்பிரிவின் ஊடே செல்லும் மின் பாதை மனுதாரர் சொந்த செலவில் சாலை அமைப்பிற்க்கு ஏற்ப மாற்றி அமைத்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

SWP / DTCP /ERODE / LAYOUT APPROVAL No:- 16/2022

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Erode
Date:2022.09.24 14:09:41

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,(மு.கூ.பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
ஈரோடு மாவட்டம்